முருகப்பெருமான் துணை

**மகான் அகப்பைச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.04.2023**, வெள்ளிக்கிழமை

1. அறிவுத்தெளிவுற அகந்தை விலகி
ஆன்ம பலமுடன் ஞானம்திடமுற
வறுமை போக்கி வழிநடத்திட
வள்ளலாய் வந்த அரங்கனே
2. அரங்கனே அறிவுரை ஆசியாக
அறிவிப்பேன் அகப்பைச்சித்தர் யானும்
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 15 ம் நாள், 28.04.2023, வெள்ளிக்கிழமை)
வரங்களாக சோபகிருது தகர் திங்கள்
வல்லமைபட மூவைதிகதி புகர்வாரம்
3. வாரமதில் பிறப்பின் பயனை
வையகத்தில் மக்களுணர உரைப்பேன்
சோரம்போகா மானிடப்பிறவி
சித்திநிலை கண்டுத் தேறிட
4. தேறிட உண்டு கழித்து காலத்தை
தேய்த்தோம் வாழ்வை என்றிலா
அறிவின் பலம் தானடைய
அறமாக வரும் ஞான நூல்களை
5. நூல்களை வாசித்துப் பழகி
நடப்பவை அனைத்தும் வாழ்வில்
சோல்லவே நல்வினைதீவினை வழிகளாக
செயல்படுகிறது எனும் அறிவு
6. அறிவுத் தெளிவுமாகத் துவங்கி
அடுத்து அதனை சமன் செய்ய
அறிவின் வழித் தேடல் கூடி
அனுகுமாம் ஞான குருவின் புலனை
7. புலன் தேடி அடைய மானிடருக்கு
புண்ணியம் மிகுதி வேண்டுமப்பா
சலனமற இந்தநிலை அளவு
சாற்றிட மனமும் அறிவும் இணைந்திட

8. இணைந்திட இவர்களை தேடி
இயல்பாக இலகுவாக குருவருள்
துணையாக வந்து காக்கும்
தக்கபடி கலியினில் அருளவே
9. அருளவே அவதாரம் எடுத்த
ஆறுமுக அரங்க ஞானி
அருளும் தயவும் மக்களுக்கு
ஆற்றலாக அனுகி காக்க இருக்க
10. இருக்கவே கலிவாழ் மக்கள்
இன்னும் காலமதை கடத்தா
அருந்தவசி ஆறுமுகனார் வாழ்
ஆற்றல் மிக்க பிரணவக்குடிலை
11. பிரணவக்குடிலை அனுகிவர
பிறப்பின் ரகசியம் விளங்கி
சரவணச் சுடரின் வழியே
சர்வமும் கண்டுத் தெளிவர்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—